**World Tamil Christian Fellowship**
60, High Worple, Rayners Lane, Harrow
Middlesex, HA2 9SZ, United Kingdom
www.wcflondon.com
wcflondon@gmail.com

# இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை – பாடம் 18

# உபத்திரவம் – 12

# கிறிஸ்துவின் நியாயாசனம்

## கிறிஸ்துவின் நியாயாசனம் (பீமா (Bema))

புதிய ஏற்பாட்டில் நிறைய நியாயத்தீர்ப்புகள் உள்ளன. ஆனால் வெகுமதி குறித்த கோட்பாடு *(Doctrine of Rewards)* அல்லது கிறிஸ்துவின் நியாயாசனம் *(Judgement Seat of Christ)* என அழைக்கப்பட்டதே அதில் முக்கியத்துவம் பெற்ற கோட்பாடாகும்.

துரதிருஷ்டவசமாக, அது பெரும்பாலும் நியாயத்தீர்ப்பு எனக் குறிப்பிடப்படுகிறது, எனவே அது கேட்பவருக்கு எதிர்மறையான அதிர்வுகளை ஏற்படுத்துகிறது.

**ஆய்வுப் பொருள் (Subjects)**: விசுவாசிகள் மட்டுமே

**2 கொரிந்தியர் 5:10**, ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்.

**காலம்**: இரகசிய வருகையின் போது.

**இடம்**: பரலோகத்தில், இரகசிய வருகைக்கு பிறகு

**ரோமர் *14:10*,** *இப்படியிருக்க, நீ உன் சகோதரனைக் குற்றவாளியென்று தீர்க்கிறதென்ன? நீ உன் சகோதரனை அற்பமாய் எண்ணுகிறதென்ன? நாமெல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போமே.*

***Result***: *விசுவாசிக்கு – வெகுமதிகள் அல்லது வெகுமதிகள் இழப்பு – ஆனால் அனைவரும் இரட்சிக்கப்படுவார்.*

***1 கொரிந்தியர் 3:11-15***, *[11]போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய*
*இயேசுகிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப்*
*போட ஒருவனாலும் கூடாது. [12]ஒருவன் அந்த*
*அஸ்திபாரத்தின்மேல் பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற*
*கல், மரம், புல், வைக்கோல் ஆகிய இவைகளைக் கட்டினால்,*
*[13]அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும்; நாளானது*
*அதை விளங்கப்பண்ணும். ஏனெனில் அது அக்கினியினாலே*
*வெளிப்படுத்தப்படும்; அவனவனுடைய வேலைப்பாடு*
*எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும்.*
*[14]அதின்மேல் ஒருவன் கட்டினது நிலைத்தால், அவன்*
*கூலியைப் பெறுவான். [15]ஒருவன் கட்டினது வெந்துபோனால்,*
*அவன் நஷ்டமடைவான்; அவனோ இரட்சிக்கப்படுவான்;*
*அதுவும் அக்கினியிலகப்பட்டுத் தப்பினதுபோலிருக்கும்.*

*தேவன் திரும்பி வரும்போது சபைக்கு வெகுமதிகளை அளிப்பார் என்ற உண்மை அபோஸ்தலனாகிய பவுலை உந்தியது. இதை குறித்து அவர் 2 தெசலோனிக்கேயர் நிருபத்தின் ஒவ்வொரு அதிகாரத்திலும் குறிப்பிட்டுள்ளார். எனவே இதுவே அந்த நிருபத்தின் முதன்மையான*

*கருப்பொருளாயிற்று. தேவன் திரும்ப வருவது என்பதே புதிய ஏற்பாட்டில் நமக்கான முக்கிய விஷயமாகும்.*

*இரட்சிப்பு என்பது ஒரு பரிசு, அதை நம்மால் சம்பாதிக்க முடியாது. ஆனால் கிறிஸ்தவ வாழ்வில் உத்தமமாக உள்ளவர்களுக்கு வெகுமதிகள் வழங்கப்படும். கிறிஸ்தவ நடத்தையில் உத்தமமாக இல்லாதவர்கள் வெகுமதிகளை இழப்பார்கள்.*

*கிறித்தவ வாழ்வில் வெகுமதிகள் ஒரு பெரிய உந்துதலாக (motivation) உள்ளது. அனால் நாம் இந்த வெகுமதிகளின் இயல்பை குறித்து அறிந்து கொண்டால் இந்த உந்துதலின் இயல்பை பற்றி அறிந்து கொள்ளலாம். சில மக்கள் இந்த வெகுமதிகள் பற்றிய கோட்பாட்டினால் கலக்கம் அடைவார்கள். ஏனெனில் இதில் "கிருபைக்கு" பதிலாக "தகுதி" பரிந்துரைக்கப்படுகிறது. மேலும் நாம் தேவனை நேசிப்பதற்காகவும் தேவனுடைய மகிமைக்காகவும் மட்டுமே அவருக்கு சேவை செய்ய வேண்டும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.*

கிறிஸ்துவின் **நியாயாசனம்** என்ற வார்த்தை

*ரோமர் 14:10 மற்றும் 2 கொரிந்தியர் 5:9 இரண்டுமே "நியாயாசனத்தை" பற்றி கூறுகிறது.*

*இது **'பீமா (bema)'** என்ற கிரேக்க வார்த்தையின் மொழிபெயர்ப்பாகும்.*

*சுவிசேஷ நூல்கள் மற்றும் அப்போஸ்தலர் நடவடிக்கைகள் பீமாவை (bema) "ரோம நீதிபதி அல்லது ஆட்சியாளர் முடிவுகளை எடுப்பதற்கும் தண்டனை வழங்குவதற்கும்*

அமைக்கப்பட்ட ஒரு உயர்ந்த மேடையாக" பயன்படுத்தியுள்ளனர் *(மத்தேயு 27:19; யோவான் 19:13).* கிரேக்க தடகளப் போட்டிகளுக்கு மேற்கோளாய் பவுல் இந்த வார்த்தைய பயன்படுத்துகிறார்.

இந்த வார்த்தையை 'இஸ்த்மியன் *(Isthmian)* விளையாட்டுகளில்' இருந்து எடுக்கப்பட்டுள்ளது. அங்கே போட்டியாளர்கள் இந்த போட்டிகளின் ஒவ்வொரு விதிமுறைக்கும் கீழ்ப்படிந்தனரா என்று உறுதி செய்யும் நீதிபதிகளின் ஆய்வுக்கு கீழ் பரிசுக்காக போட்டியிட வேண்டும் *(2 தீமோத்தேயு 2:5).*

விதிகளின்படி பங்கேற்ற நிகழ்வுகளில் வெற்றி பெற்றவரை பீமா *(Bema)* என்ற மேடைக்கு நீதிபதி வழிகாட்டி அழைத்துச்செல்வார். அங்கே அந்த வெற்றியாளருக்கு ஒலிவம் *(olive)* அல்லது கருவாலி *(oak)* மரத்தின் இலைகளில் செய்த கிரீடத்தை வெற்றியின் சின்னமாக அவர்கள் தலையில் வைத்து முடிசூட்டுவார்கள் *(1 கொரிந்தியர் 9:24-25).* நாம் கிரீஸிலுள்ள *(Greece)* ஏதென்ஸில் *(Athens) 2004*இல் நடைபெற்ற ஒலிம்பிக் *(Olympic)* விளையாட்டு போட்டிகளைப் பார்த்தோம் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

ஆவிக்குரிய பந்தயத்தின் போட்டியாளர்களாய் பவுல் விசுவாசிகளை உருவகப்படுத்துகிறார். வெற்றி பெற்ற கிரேக்க தடகள வீரர் பீமாவின் முன் அழிந்துபோகிற வெகுமதியை பெற வருவது போல கிறிஸ்தவர்களும் கிறிஸ்துவின் பீமாவின் முன் அழிவற்ற வெகுமதியை பெற செல்வோம்.

- பீமாவில் ஓட்டத்தை ஓடி வெற்றி பெற்றவருக்கு வெகுமதிகளை வழங்குவார்கள்.

- *கிறிஸ்த்தவத்தில் ஓட்டத்தை ஓடி முடித்த அனைவரும் வெற்றியாளர்களே. தோல்வி என்பது இல்லை.*

## *'பீமா' ('bema') எங்குள்ளது?*

***யோவான்** 14:3, நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்.*

*இயேசு மீண்டும் வந்து நம்மை தந்தையின் வீட்டிற்கு அழைத்துப்போவதாக கூறினார்.*

*அதனால், நமக்கு 'பீமா' ('bema') என்பது பரலோகத்திலுள்ளது.*

## *யார் அந்த நீதிபதி?*

*நம் தேவனாகிய இயேசு கிறிஸ்துவே அந்த நீதிபதி. நாம் அவரை வானத்தின் பாதி வழியில் சந்தித்து பின்னர் அவருடனே எப்போதும் இருக்க செல்வோம்.*

*1 **தெசலோனிக்கேயர்** 4:17, பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக மேகங்கள்மேல், அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்.*

*எல்லா நியாயத்தீர்ப்பும் இயேசுவிற்கே வழங்கப்பட்டது.*

***யோவான்** 5:22, அன்றியும் பிதாவைக் கனம்பண்ணுகிறது போல எல்லாரும் குமாரனையும் கனம்பண்ணும்படிக்கு, பிதாவானவர்தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புச்*

*செய்யாமல், நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக் கொடுத்திருக்கிறார்,*

*வெகுமதிகளும் அவரிடமே உள்ளது.*

***வெளி** 22:12, "இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது.*

*இந்த வெகுமதி அமைப்பில் எந்த ஒரு வகைப்பாடும் இல்லை. 60% மேல் மதிப்பெண் எடுத்தோர் வலது பக்கத்தில் வந்து நில்லுங்கள் என்பது போன்ற ஒன்றும் அங்கில்லை. ஆனால் நாம் அனைவரும் நம்முடைய வெகுமதியை தனிப்பட்ட முறையில் பெற்றுக்கொள்ளப்போகிறோம்.*

## *யார் அங்கெ இருப்பார்கள்?*

*நாம் அனைவரும் அங்கு இருப்போம். "நாம்" என்ற வார்த்தை 26 முறை இந்த அதிகாரத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இது எப்போதும் விசுவாசிகளையே குறிக்கிறது. மேலும் இந்த நியாயத்தீர்ப்பின்போது ஒருவரும் நரகத்திற்கு போகமாட்டார்கள். இது விசுவாசிகளுக்கு மட்டுமே,*

*1 **கொரிந்தியர்** 3:14-15; **கலாத்தியர்** 6:8; **எபேசியர்** 6:8; **கொலோசெயர்** 3:24.*

*2 **கொரிந்தியர்** 5:5-9, [5]இதற்கு நம்மை ஆயத்தப்படுத்துகிறவர் தேவனே; ஆவியென்னும் அச்சாரத்தை நமக்குத் தந்தவரும் அவரே. [6]நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம். [7]இந்தத் தேகத்தில் குடியிருக்கையில் கர்த்தரிடத்தில்*

*குடியிராதவர்களாயிருக்கிறோமென்று அறிந்தும், எப்பொழுதும் தைரியமாயிருக்கிறோம். [8]நாம் தைரியமாக வேயிருந்து, இந்தத்தேகத்தை விட்டுக் குடிபோகவும் கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம். [9]அதினிமித்தமே நாம் சரீரத்தில் குடியிருந்தாலும் குடியிராமற்போனாலும் அவருக்குப் பிரியமானவர் களாயிருக்க நாடுகிறோம்.*

*வ5, விசுவாசி மட்டுமே இதனை கூற முடியும்.*

*வ7, கிறிஸ்துவுக்குள் விசுவாசம் கொண்டவரால் மட்டுமே விசுவாசத்தில் நடக்க முடியும்.*

## இந்த நியாயத்தீர்ப்பின் நோக்கம்

***ரோமர் 14:12,*** *ஆதலால் நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக்குறித்து தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான்.*

*ஒவ்வொரு விசுவாசியும் தன்னை குறித்ததான கணக்கை தேவனிடம் கொடுக்கப் போகிறோம். மனிதனுக்கு தன்னைப்பற்றி தெரிந்ததைக் காட்டிலும் தேவனுக்கு மற்ற எல்லாவற்றை பற்றியும் மனிதனை பற்றியும் நன்றாகவே தெரியும். நாம் எல்லோரும் ஒரு உந்துதல்(Motivation) இருந்தால் அதை சிரத்தையாக செய்யவோம் என்று தேவன் அறிவார். அந்த உந்துதலுக்கு பெரிய காரணி (factor) அதிகாரமும் மற்றும் பொறுப்புமே ஆகும்.*

*நாம் அனைவரும் வாகனத்தில் சுற்றி வருகிறோம். வேகத்தை கண்காணிப்பதற்காக பொருத்தப்பட்டுள்ள நிழற்படக் கருவியின் (speed camera) அருகில் செல்லும் போது நீங்கள் எவ்வாறு ஓட்டுவீர்களஎ?*

*ஆனால் நீங்கள் வேகத்தை கண்காணிப்பதற்காக பொருத்தப்பட்டுள்ள நிழற்படக் கருவியை (speed camera) பார்க்கவில்லை என்றால் எவ்வாறு ஓட்டுவீர்கள்?*

*கிறிஸ்துவின் நியாயாசனம் நாம் அனைவருக்குமானது, விதிவிலக்கு ஏதும் இல்லை. இது நம்மை பற்றிய கணக்கை தேவனிடம் கொடுப்பதற்கானது.*

*இந்த நவீனகால கிருபையை பற்றிய பிரசங்கம், இந்த பொறுப்பை பற்றி நாம் மிகவும் சுதந்திரமாகவும் எளிதாகவும் இருக்க முடியும் என்ற தவறான நம்பிக்கையை அளிக்கிறது. ஆனால் நாம் ஒருநாள் இயேசு கிறிஸ்துவிற்கு முன் நிற்கப்போகிறோம். மேலும் நம்முடைய வாழ்க்கையை பற்றிய பேச்சுவார்த்தையை நடத்தப் போகிறோம்.*

*அபோஸ்தலனாகிய பேதுரு கதவின் அருகில் நின்று அட்டவணையில் உங்களுடைய பெயரை பார்த்த பின் முத்து கதவின் (pearly gate) வழியே உங்களை உள்ளே அனுப்பும் இந்த கதையை நாம் எங்கிருந்து பெற்றோம் என்று எனக்கு தெரியவில்லை. இது முற்றிலுமான முட்டாள்தனம்.*

*நாம் பரலோகத்திற்கு செல்வோமா அல்லது நரகத்திற்கு செல்வோமா என்பதை பற்றி முடிவு செய்வது அல்ல இந்த நியாயத்தீர்ப்பு. மாறாக இது உங்கள் வெகுமதிகளை பற்றியது.*

*நீங்கள் இந்த நியாயாசனத்திற்கு வந்துவிட்டீர்கள் என்றால் நீங்கள் இரகசிய வருகையின் போது எடுத்துக்கொள்ளப்பட்டு, மாறி, மேலும் மகிமையும் அடைந்துவிட்டீர்கள் என்பது இதன் அர்த்தம். நீங்கள் இரகசிய வருகையின் போது எடுத்துக்கொள்ளப்பட்டு, மாறி, மேலும் மகிமையும் அடைந்துவிட்டீர்கள் என்றால் பிறகு பரலோகத்திற்கு செல்வதைக்குறித்த கவலை எதற்கு?*

**ரோமர்** *8:30, எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார்; எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார்; எவர்களை நீதிமான்களாக் கினாரோ அவர்களை மகிமைப் படுத்தியுமிருக்கிறார்.*

*தேவன் நம்மை அழைத்து பின்பு, உங்களை நீதிமான்களாக்கி பின்பு உங்களை மகிமைபடுத்தியுள்ளார். அதனால், நீங்கள் முன்னரே மகிமை பெற்றுவிட்டால் பரலோகத்திற்குள் செல்வதை பற்றி கவலை கொள்ள தேவையில்லை. நீங்கள் ஏற்கனவே அந்நேரத்தில் பரலோகத்தில் உள்ளீர்கள்.*

***நாம் இரட்சிப்பு அடைந்த பின்னர் செய்த எல்லா பாவங்களுக்காக*** *தேவன் நம்மை தண்டிக்க போகிறார் என கிறிஸ்தவ வட்டாரத்தில் நினைக்கிறார்கள்.*

*இயேசு சிலுவையில் அறையப்பட்ட போது அனைத்து பாவங்களும் எதிர்காலத்தில் தான் உள்ளது. என்னுடைய எல்லா பாவங்களும் கல்வாரி சிலுவையில் முழுமையாக செலுத்தப்பட்டுவிட்டது. இன்னமும் கொடுப்பதற்கு ஒன்றுமில்லை. இன்னும் கூடுதலான பணம் செலுத்தப்பட வேண்டும் என்று நீங்கள் நினைத்தால், நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மரணத்தை பரிகசிக்கிறீர்கள்.*

*ஒரு கிறிஸ்தவரின் வாழ்க்கையில் மன்னிக்கப்படாத பாவம் என்று ஒன்றிருப்பதற்கு வாய்ப்பே இல்லை.*

***எபிரெயர் 8:12**, ஏனெனில் நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்."*

***கொலோசெயர் 2:12**, ஞானஸ்நானத்திலே அவரோடேகூட அடக்கம்பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்.*

***எபேசியர் 1:7**, அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே, இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது.*

*அவருடைய ஐஸ்வரியத்தை பொறுத்து, நம்முடையதல்ல...*

***1 யோவான் 2:12**, பிள்ளைகளே, அவருடைய நாமத்தினிமித்தம் உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்கிறதினால் உங்களுக்கு எழுதுகிறேன்.*

***ஏசாயா 38:17**, இதோ, சமாதானத்துக்குப் பதிலாக மகா கசப்பு வந்திருந்தது, தேவரீரோ என் ஆத்துமாவை நேசித்து அழிவின் குழிக்கு விலக்கினீர்; என் பாவங்களையெல்லாம் உமது முதுகுக்குப் பின்னாக எறிந்துவிட்டீர்.*

*எசேக்கியா (Hezekiah) ராஜா தன்னுடைய பாவம் மன்னிக்கப்பட்ட பின்னர் தன்னுடைய ஆயுள் 15*

*ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்ட பின்னர் இந்த பாடலை தேவனுக்காக பாடுகிறார்.*

*தேவன் நம்முடைய பாவங்களை அவருக்கு பின்னுக்குத் தள்ளிவிட்டதாகக் கூறுகிறார். அது தோள்பட்டை கத்திகளுக்கு (shoulder blade) இடையே இருக்கிறது என்பதே எபிரேய மொழியில் இதற்கான மொழிபெயர்ப்பு. ஒரு மனிதன் தன் உடலில் காண முடியாத ஒரே இடம் அது அவன் தோள்பட்டையின் (shoulder blade) மையம். என்ன ஒரு அற்புதமான அடையாளத்தை தேவன் காட்டியுள்ளார்.*

***ரோமர் 8:1,** ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட் பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை.*

***ரோமர் 8:33-34,** [33]தேவன் தெரிந்துகொண்டவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர். [34]ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்துமிருக்கிறவர்; அவரே தேவனுடைய வலதுபாரிசத்திலும் இருக்கிறவர், நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே.*

*நம்முடைய கர்த்தரிடமிருந்து என்ன ஒரு மகத்துவமான வாக்குறுதி?*

***நாம் அறிக்கையிடாத எல்லா பாவங்களுக்காகவும் தேவன் நம்மை தண்டிப்பார்** என்பது மற்றொரு கோணம்.*

*நாம் அறிக்கையிடாத போது அதற்கு மன்னிப்பு கிடையாது என இதை போல நீங்கள் எண்ணுகிறீர்களா?*

*கிறிஸ்தவனுடைய வாழ்கையில் பாவ மன்னிப்புக்கும் பாவத்தை அறிக்கை செய்யவதற்கும் எந்த ஒரு சம்பந்தமும் இல்லை என்பதை நான் பல முறை பிரசங்கித்துள்ளேன். ஐக்கியத்திற்காகவே பாவத்தை அறிக்கை செய்கிறோம் மன்னிப்பு பெறுவற்காக அல்ல.*

*நாம் இரட்சிக்கப்பட்ட போது நம்முடைய எல்லா பாவங்களுக்கும் மன்னிப்பு கிடைக்கிறது. நாம் அதை அறிக்கை செய்யும் போது பிதாவுடனான நம்முடைய ஐக்கியத்தை நம்மால் பரிசுத்தமாக பராமரிக்கமுடிகிறது.*

*நீங்கள் உங்கள் வாழ்க்கையில் அறிக்கையிடாமல் பாவம் வைத்திருக்கலாம். ஆனால் இது உங்கள் இரட்சிப்பை ஆக்கிரமிக்காது. ஆனால் இது என்ன செய்யும் என்று உங்களுக்கு தெரியுமா?*

*இது பிதாவுடனான உங்களது பரிசுத்தமான ஐக்கியத்தை கெடுக்கிறது. அறிக்கை இடாத பாவம் ஐக்கியத்தை பற்றிய விஷயம். அறிக்கையிடுவது ஐக்கியத்திற்காக மட்டுமே.*

*1* **யோவான்** *1:9, நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.*

*1 யோவான் அதிகாரம் 1இலிருந்து நம்முடைய தேவனுடனான ஐக்கியத்தை குறித்து மூன்று கொள்கைகளை தெளிவாக காணலாம்,*

- *அது நித்தியத்திற்குமானது,*
- *நாம் எப்போதும் ஒளியிலேய நடக்க வேண்டும் மேலும்,*
- *கிறிஸ்துவினுடைய இரத்தத்தை எப்போதும் நம்மை எல்லா பாவங்களிலிருந்து சுத்திகரிக்கும்.*

## வெகுமதிகள்:

### *1.* கிரீடத்தை பற்றிய வாக்குறிதி.

*கிரீடத்தை பற்றியதான வாக்குறிதி வெற்றி, அதிகாரம் மற்றும் கடமையின் அடையாளம்.*

### *a)* *'ஸ்திபநோஸ்' ('Stephanos'):*

*இதுதான்* **வெற்றிக்கான கிரீடம்***. வெற்றி பெற்ற போட்டியாளர்களுக்கு நீதிபதியால் பீமாவின் (Bema) முன் கொடுக்கப்படும் மகுடம் (wreath). கிறிஸ்தவ வாழ்வில் விசுவாசத்தோடு உள்ளவர்களுக்காக வாக்குறுதி அளிக்கப்பட கிரீடத்தைக் குறிக்க பயன்படுத்தும் வார்த்தை.*

### *b)* *'பரிவட்டம்' ('Diadem'):*

*இது* **அரச கிரீடம்***, ராஜாவின் கிரீடம். வெளி 12:3 மற்றும் 13:1இல் மிருகமானது இந்த ஏழு பரிவட்டத்தை (diadems) பயன்படுத்தியது. ஆனால், கிறிஸ்துவே*

*ராஜாவிற்கெல்லாம் ராஜா. தேவன் திரும்பி வரும்போது அவர் அணியப்போகும் அநேக பரிவட்டத்தை (diadems) குறிக்கவும் இந்த வார்த்தை பயன்படுகிறது. (வெளி 19:12).*

*c)* ***அழிவில்லா கிரீடம்:*** *1 கொரிந்தியர் 9:25.*

*இது எல்லா கிரீடத்தையும் விவரிக்கிறது. This describes all the crowns. இது ஒரு சிறப்பான கிரீடம். இதை விசுவாசத்தோடு பந்தயத்தில் ஓடி மேலும் சுயக்கட்டுப்பாடை பயன்படுத்தி கர்த்தருக்கு சேவை செய்வதற்காகவும், பந்தயத்தை முடிப்பதற்காகவும் வழங்கப்படுகிறது.*

*d)* ***வெற்றி அல்லது மகிழ்ச்சிக்கான கிரீடம்***

*1 தெசலோனிக்கேயர் 2:19; பிலிப்பியர் 4:1.*

*இந்த கிரீடத்தை சாட்சியாக இருந்ததற்காகவும், அவர்களை பின்தொடர்ந்தற்காகவும் மேலும் மற்றவர்களுக்கு ஊழியம் செய்ததற்காகவும் வெகுமதியாக வழங்கப்படுகிறது. ஒரு வகையில், தெசலோனிக்கேயர்களே பவுலின் கிரீடமாக இருப்பார்கள். பீமாவிலுள்ள பலனின் நிமித்தமும் நித்தியத்திற்கும் அவர்கள் நித்தியத்தில் இருப்பதற்காக களிகூர்ந்து வெற்றி கொண்டாடத்தில் அவர்களுடன் பரலோகத்தில் இருப்பார்.*

*e)* ***வாழ்கைக்கான கிரீடம்*** *யாக்கோபு 1:12; வெளி 2:10*

*சோதனைகளையும் சலனத்தையும் சமாளித்தற்காக இந்த கிரீடம் வழங்கப்படுகிறது. இது இரட்சிப்பின் கிரீடம் அல்ல. இரட்சிப்பு என்பது கிறிஸ்துவின் மீது மட்டுமே கொண்டுள்ள விசுவாசத்திற்கான பரிசு. ஆனால் இது சோதனைகளையும் சலனத்தையும் சமாளித்தற்காக கொடுக்கப்படும் வெகுமதி.*

*f)* ***நீதியின் கிரீடம்*** *2 தீமோத்தேயு 4:8.*

*தேவனுடைய சேவைக்காகவும் அவருடைய வருகையை அன்புடன் எதிர்நோக்கி நம்முடைய வரங்களையும் வாய்ப்புகளையும் விசுவாசத்தோடு உபயோகித்தற்கான வெகுமதியே இந்த கிரீடம். இந்த இரண்டும் ஒன்றோடொன்று செல்லும் என்பதை குறித்துக்கொள்ளுங்கள். அவருடைய வருகையை அன்புடன் எதிர்நோக்குவது என்பது அவருடைய வெளிச்சத்தில் வாழ்வதாகும்.*

*g)* ***மகிமையின் கிரீடம்*** *1 பேதுரு 5:4*

*மூப்பர்கள் தாங்கள் மேய்க்கும் பொறுப்புகளை உத்தமத்தோடு நிறைவேற்றியதால் அவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட வெகுமதியே இந்த கிரீடம்.*

**கிரீடங்களை சமர்பித்தல்**

***வெளி 4:10-11,*** *[10]இருபத்துநான்கு மூப்பர்களும் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து, சதாகாலங்களிலும் உயிரோடிருக் கிறவரைத் தொழுதுகொண்டு, தங்கள் கிரீடங்களைச் சிங்காசனத்திற்குமுன்பாக வைத்து: [11]கர்த்தாவே, தேவரீர், மகிமையையும் கனத்தையும் வல்லமையையும் பெற்றுக் கொள்ளுகிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர், நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர், உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும் சிருஷ்டிக்கப் பட்டவைகளு மாயிருக்கிறது என்றார்கள்."*

*ஏனெனில் கிறிஸ்து மட்டுமே மதிப்பிற்குரியவர். நாம் அவரில் நிலைத்திருந்தால் மட்டுமே நம்மால் கனி கொடுக்க முடியும். அவருடைய வாழ்வை நம்மில் நிரப்ப நாம் அனுமதித்து மேலும் நாம் அனைவரும் இதனை அவருடைய கிரிபையினாலே செய்தோம் என அங்கீகரிக்கும் விதமாக நம்முடைய எல்லா கிரீடங்களையும் அவர் முன் சமர்பிக்க வேண்டும்.*

## *2.* **பரலோக பொக்கிஷங்களை பற்றியதான வாக்குறுதி**

*அவற்றின் நித்திய மதிப்பு மற்றும் பாதுகாப்பை அழுத்தி சொல்லுதல்.*

***மத்தேயு 6:20,*** *பரலோகத்திலே உங்கள் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது*

*கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை.*

***1 பேதுரு 1:4,*** *அவர், இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்.*

## *3.* மெச்சுதல் அல்லது பாராட்டுதலுக்கான வாக்குறுதி.

*நாம் அவர் முன் நிற்கும் போது, தேவன் தாமே வாழ்த்திக் கூறுவதாவது, "நல்லது, உத்தமமும் உண்மையுமான ஊழியக்காரனே". தேவன் உங்களிடம் ஒப்படைத்த காரியத்தை நன்றாக பார்த்துக்கொண்டதற்காக உங்களுடைய உத்தமத்தை அவர் பாராட்டுவதே ஒருவன் பெறக்கூடிய மிகப்பெரிய சாதனையாகும். மத்தேயு 25:21; லூக்கா 19:17*

## *4.* ஜெயங்கொள்ளுவதற்கான வாக்குறுதி .

***வெளி*** *2:7, "ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்; ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கக்கொடுப்பேன் என்றெழுது."'*

**வெளி** *2:11, "ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்; ஜெயங்கொள்ளுகிறவன் இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவதில்லை என்றெழுது."'*

**வெளி** *2:17, "ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்; ஜெயங்கொள்ளுகிறவனுக்கு நான் மறைவான மன்னாவைப் புசிக்கக்கொடுத்து, அவனுக்கு வெண்மையான குறிக்கல்லையும், அந்தக் கல்லின்மேல் எழுதப்பட்டதும் அதைப் பெறுகிறவனேயன்றி வேறொருவனும் அறியக்கூடாததுமாகிய புதிய நாமத்தையும் கொடுப்பேன் என்றெழுது."'*

**வெளி** *2:26, ஜெயங்கொண்டு முடிவுபரியந்தம் என் கிரியைகளைக் கைக்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு, நான் என் பிதாவினிடத்தில் அதிகாரம் பெற்றதுபோல, ஜாதிகள்மேல் அதிகாரம் கொடுப்பேன்.*

*எல்லா விசுவாசிகளுக்குமான பொதுவான வாக்குறுதியாக இல்லாமல், குறிப்பிட்ட சோதனைகளையும் பரீட்சைகளையும் கைக்கொள்ளுகிற அந்த விசுவாசிகளுக்கு இந்த பிரத்தியேகமான ஆசிர்வாதங்களான வெகுமதிகளை குறிப்பிடலாம்.*

*நம்முடைய வெகுமதிகள் முதன்மையாக நம்முடைய கடமைக்காகவும் மேலும் சந்தர்ப்பங்களை பயன் படுத்தியதற்காகவும் இருக்கலாம். ஆனால், அவை இராணுவத்தில் அணிந்திருக்கும் சின்னங்கள் அல்லது பதக்கங்களைப் போல இருக்காது. நம்முடைய எல்லா கிரீடங்களையும் கிறிஸ்துவினுடைய பாதத்தில் வைப்போம்*

*என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஏனெனில் அவரே மதிப்பிற்குரியவர். வெளி 4:10-11.*

*மேலும், நம்முடைய வெகுமதிகளுக்கு பல விஷயங்களில் அல்லது பல நகரங்களில் அதிகாரம் கொண்டது என்பதை மத்தேயு 25:21- 23 மற்றும் லூக்கா 19:17-19 நமக்கு காண்பிக்கிறது. அவை பிரபஞ்சத்தின் விண்மீன் கூட்டங்களையும் உள்ளடக்கியிருக்கலாம். எல்லா விசுவாசிகளும் ஆயிரவருடத்திலும் (millennium) நித்தியத்திற்கும் தேவனோடு வாழ்வார்கள். சிலர் அவரோடு ஆட்சி செலுத்துவார்கள். ஆனால் சிலர் வெகுமதிகளை இழந்ததினால் அவர்களால் முடியாமல் போகும்.*

## *எச்சரிக்கைக்கான ஒரு வார்த்தை:*

***1 கொரிந்தியர் 3:14-15,*** *[14]அதின்மேல் ஒருவன் கட்டினது நிலைத்தால், அவன் கூலியைப் பெறுவான். [15]ஒருவன் கட்டினது வெந்துபோனால், அவன் நஷ்டமடைவான்; அவனோ இரட்சிக்கப்படுவான்; அதுவும் அக்கினியிலகப்பட்டுத் தப்பினதுபோலிருக்கும்.*

*இரண்டு விஷயங்கள் உள்ளன.*

1. *வரவிருக்கும் வாக்குதத்தம்,*
2. *சிலர் தங்கள் வெகுமதிகளை இழக்கக்கூடும் என்ற எச்சரிக்கையும் உள்ளது.*

*நீங்கள் பெறக்கூடிய முழு வெகுமதியை பெறகூடாமல் போகலாம்.*

*ஏன்?*

*ஏனென்றால் நீங்கள் எவ்வாறு வாழ வேண்டுமோ அத்தகைய வாழ்கையை வாழ்ந்திருக்கவில்லை. நீங்கள் உங்கள் முன்னுரிமைகளை சரியான முறையில் அமைத்து, அவ்வாறு வாழவில்லை.*

*2 **யோவான்** 8, உங்கள் செய்கைகளின் பலனை இழந்துபோகாமல், பூரண பலனைப் பெறும்படிக்கு எச்சரிக்கையாயிருங்கள்.*

*நீங்கள் சில காரியங்களை செய்கிறீர்கள். அவற்றின் மூலம் முழு வெகுமதியையும் பெறலாம் பெறாமலும் போகக்கூடும் என்ற இந்த காரியங்களை பற்றி மேற்கூறியவற்றில் இருந்து நாம் அறிந்து கொள்ளலாம்.*

*நான் செய்யும் சில காரியங்கள் தேவனை மகிழ்விக்கலாம். ஆனால் என்னுடைய வாழ்க்கையில் நான் செய்த பாவங்களின் நிமித்தம் நான் என்னுடைய கிரீடத்தை இழக்கவோ விட்டுக்கொடுகவோ நேரக்கூடும் என்ற அதே பயம் அபோஸ்தலனாகிய பவுலுக்கும் இருந்தது.*

***வெளி** 3:11, இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு.*

*என்ன?*

*"உங்கள் கிரீடத்தை எடுத்துக்கொள்ளுங்கள்."*

***கொலோசெயர் 2:19**இல், "எவனும் உங்கள் பந்தயப்பொருளை நீங்கள் இழந்துபோகும்படி உங்களை வஞ்சியாதிருக்கப் பாருங்கள்." என்று பவுல் கூறுகிறார்.*

*சில மக்களுக்கு அது அவமானத்தின் நாளாக இருக்கும்.*

*அதை எவ்வாறு நாம் அறிந்து கொள்ளலாம்?*

*1* ***யோவான்*** *2:28, "இப்படியிருக்க, பிள்ளைகளே, அவர் வெளிப்படும்போது நாம் அவர் வருகையில் அவருக்கு முன்பாக வெட்கப்பட்டுப்போகாமல் தைரியமுள்ளவர் களாயிருக்கும்படி அவரில் நிலைத்திருங்கள்."*

*ஒரு கிறிஸ்தவன் நியாயாசனத்திற்கு முன் நின்றும் கூட அவனுடைய இருதயத்தின் ஆழத்தில் இழப்பு இருப்பதற்கு சாத்தியம் உள்ளது என்பது நமக்கு தெரியும்.*

*"இழப்பு ஏற்படும்" என வேதாகமம் தெளிவாக கூறுகிறது. மேலும், வெட்கப்படுவதற்கான வாய்பையும் வேதாகமம் குறிப்பிடுகிறது.*

*நாம் செய்கின்ற சில வேலைகள் நிச்சயமாக மிகவும் பயனற்றவையாக இருக்கும். எனக்கு உங்களை பற்றி தெரியாது. ஆனால் அந்நாளில் எனக்கு என்னுடைய வாழ்கை கணக்கு கொடுக்கக்கூடியதாக இருக்க வேண்டும். அதன் பிறகு அந்த கிரீடங்களை இயேசு கிறிஸ்துவினுடைய பாதங்களில் வைக்கும் அந்த சந்தோஷம் எனக்கு வேண்டும். ஏனெனில் இயேசு கிறிஸ்துவினாலே எல்லாம் சாத்தியமானது.*

*அதனால் என் அன்புக்குரியவர்களே, நான் இந்த கிறிஸ்தவ வாழ்வை வாழ உற்சாகமாக உள்ளேன்...*

*கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நின்று அவர் என்னை "நல்லது, உத்தமமும் உண்மையுமானவன்" என்று கூறுவதை கேட்கவும் மேலும் அவர் எனக்கு பல கிரீடங்களை கொடுப்பதை காணவும் ஆவலோடு காத்திருக்கிறேன்.*

*மேலும் அவற்றை அவர் பாதத்தில் வைத்து ஆராதனை செய்து நித்தியத்திற்கு அவருடைய மகிமையில் வாழவும் ஆவலோடு காத்திருக்கிறேன்!!*